கசடதபற

ஆசிரியர்: நா. கிருஷ்ணமூர்த்தி

33 | பிப்ரவரி—1975 | 50 காசு



ஓவியம்: சிதம்பர கிருஷ்ணன்

கருங்கடலும் கலைக்கடலும்
(ரொமானியா, செக்கோஸ்லவாக்கியா பிரயாணம்)
தி. ஜானகிராமன் ரூ. 10-50

புனலும் மணலும்
(நாவல்) ஆ. மாதவன் ரூ. 7-50

அரையும் குறையும்
(இந்தி மொழி பெயர்ப்பு நாடகம்)
மோகன் ராகேஷ் ரூ. 8-75

நாய்கள்
(நாவல்) நகுலன் ரூ. 9-00

வாசகர் வட்டம்

14 தணிகாசலம் செட்டி ரோடு சென்னை 600 017

வரும் போகும்
(கவிதை) சி. மணி ரூ. 10-00

நாற்காலிக்காரர்
(நாடகம்) ந. முத்துசாமி ரூ. 8-00

தக்கையின் மீது நான்கு கண்கள்
(சிறுகதை) சா. கந்தசாமி ரூ. 8-00



க்ரியா

23 பி. எஃப். குவாட்டர்ஸ் திருமூர்த்தி நகர் சென்னை 600 034



இலக்கியச் சிற்றேடுகளின் புறப்பாடும், நிப்பாடும் ஆன வாழ்க்கை அதை இயக்குபவர்களின் உற்சாகத்தைப் பொறுத்தது என்று இந்தியச் சிற்றேடுகளைப்பற்றிக் கூறப்படுவதுண்டு. இதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட கருத்தில் தனது வெளியீட்டை இடையில் நிறுத்திக் கொண்டிருந்தது கசடதபற.

நான்காண்டுகளுக்கு முன்பு ஒரு அக்டோபர் மாதத்தில் தொடங்கப்பட்ட கசடதபற இப்பொழுது தனது வெளியீட்டை மீண்டும் மேற்கொள்கிறது.

இனி கசடதபற ஒவ்வொரு மாதமும் முதல் தேதி அன்று வெளிவரும்.

கூழாங்கல்

கூழாங்கல்
ஒரு முழுமையான ஜீவன்

தனக்குத்தானே ஈடாக
தன் எல்லைகளைத் தெரிந்துகொண்டு

நிறைவாகவே அது நிரம்பியுள்ளது
தன் கூழாங்கற் பொருளால்

வேறெதையும் அது தன் வாசனையால் நினைவுறுத்துவதில்லை
எதையும்பயமுறுத்தித்துரத்துவதில்லை ஆசையைத்தூண்டுவதில்லை

அதன் ஆர்வமும் கல்தன்மையும்
நியாயமானது கௌரவமானது

கழிவிரக்கம் என்னுள்ளே கனக்கின்றது
கையிலதை நான் ஏந்தும்போது
மாட்சிபெற்ற அதனுடல்
பரவியிருக்கும் பொய்யான வெப்பத்தால்

கூழாங்கற்களை அடக்கிவிடமுடியாது
பார்த்துக்கொண்டேயிருக்குமவை நம்மைக் கடைசிவரை
அமைதியான மிகத் தெளிவான விழிகளால்

போலிஷ் மூலம் : ஜினியு ஹெர்பெர்ட்
தமிழில் : ஹேமந்த்

வெளியே செல்லும் தமிழ்

I

ஃப்ரான்ஸ் நாட்டுப் புலவோரும், ஆங்கிலக் கவியரசர்களும் பராவித் தம் தமிழ்க் கவிதையை மொழி பெயர்த்துப் போற்றுகிருர் களென்று பாடி மகிழ்ந்து கொண்டார் தனது காலத்தில் பாரதி. தேச கால தூரங்கள் அருகிவிட்ட இந்நாளில் தமிழ்க் கவிதையை பிற மொழிகளில் மொழி பெயர்க்கக் காண்பது எதிர்பார்க்கக்கூடிய சாதா ரணமான வொன்ருகிவிட்டது. தமிழாசைகளை ஓரளவேனும் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் சென்ற ஆண்டின் பிற்பகுதியில் இரண்டு புத்தகங்கள் வெளிவந்தன. இவ்விரு புத்தகங்களையும், எல்லா வகை களிலும் சிறந்த வசதிகள் பெற்ற நிறுவனங்கள் வெளிக்கொணர்ந்தன. இந்தியப் பண்பாட்டுறவுக் கழகம் (ICCR) புதுடில்லி, "இன்றைய இந் தியக் கவிதை" என்ற புத்தகத்தை வெளியிட்டது. பெங்குவின் நூல் கள் அளித்த "இந்தியாவில் புதிய படைப்புக்கள்" என்ற புத்தகம் மற்ருென்று.

இன்றைய இந்தியக் கவிதை என்ற தலைப்பில், தற்போதைய இந்தியமொழிக் கவிதைகளைத் திரட்டி, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தற்காலத்திய இந்தியக் கவிதைகளில் சிறந்தனவற்றைப் பற்றிய ஒரு விரிவான கண்ணோட்டத்தைத் தரவேண்டுமென்று திட்டமிட்டு, பஞ்சாபி, தமிழ், மற்றும் வங்காள மொழிக் கவிதைகளின் மொழி பெயர்ப்புகளை இந்தியப் பண்பாட்டு நட்புறவுக் கழகம் தனது முதல் தொகுதியாக வெளியிட்டிருக்கின்றது.

பதினுறு பஞ்சாபிக் கவிஞர்களின் 28 கவிதைகளை அம்ரிதா பிரீ தம் தொகுத்தளித்திருக்கின்ருர். மைந்தர் என்பவரைத் தவிர மற்ற பஞ்சாபிக் கவிஞர்கள் முதியவர்கள். பாஞ்சால மண்ணின் வீறையும், துடிப்பையும்,கவிதைகளில் எதிர்ப்பார்பவர்களுக்கு இவை அவற்றைத் தருவதில்லை. ஓரிரு கவிதைகளைத் தவிர மற்றவை பொதுவாகக் குறைந்து வரும் ஆங்கில, ஐரோப்பிய பாதிப்புக்களையே பிரதிபலிக் கின்றன. மோகன் சிங்கின் "பாதிவழி" என்ற கவிதை முற்றிலும் சிந்திக்கப்படாத கருத்துக்களையும், குறியீடுகளையும் உள்ளடக்கி வலுவற்று போகும்போது அவருடைய "என் கிராமத்துப் பெண்" என்ற கவிதை,

> கரையேறிப் போனுள் அவள்
>
> உயரமாக, மெல்லியளாக, ஒரு கரும்புபோல்

என்று ஆண் மனத்து ஆசைகளை அழகாக, இயல்பாக காட்டிவிடு கின்றது.

Indian Poetry Today Volume One - Punjabi, Tamil and Bengali
Indian Council for Cultural Relations, Azad Bhavan, New Delhi 110 001
Price : Rs. 35/-

சதிகுமாரின், எழுதப்பட்ட உருவத்தில் சோதனைப் படைப்பான ''உள்ளே'' என்ற கவிதையும் மற்ற இரு கவிதைகளையும் சேர்த்துக் காணும்போது ஒரு உள் நம்பிக்கையின்மையே வெளியாகின்றது. கரம்ஜித்தின் ''ஒட்டுப் போடுபவர்கள்'' மற்றும் ''அம்மண விளுடிகள்'' என்ற இரு கவிதைகள் மிகச் சாதாரணமானவைகளாகத் தெரிகின்றன.

தமிழகத்து வானம்பாடிக் கவிஞர்களை நினைவூட்டுகின்றன, எஸ். எஸ். மிஷா, தாராசிங், அஜய்ப் கமல் மற்றும் ரவிந்தர் ரவி ஆகியோரின் கவிதைகள். இத்தனைக்கும் மாற்ருக ஜஸ்வந்த் நேகியின் ''நினைவுகள் அழியுமுன்னுல்'' என்ற நீண்ட கவிதையின் சில பகுதிகள், சிக்கலான குறியீடுகளை அழகான கவிதைகளாகத் தருகின்றன. அம்ரிதாபிரீதத்தின் ''தெரு நாய்'' சில கூரிய காட்சிகளை அளிக்கின்றது. அவரது ''படைப்புத் தொழில்'' என்ற மற்ருெரு கவிதை பெண்ணுடலின் கபடற்ற ஆனந்தத்தையும் பெருமையையும் அவற்றிற்கு முற்றிலும் முரண்பாடான குறைக்கருவாகும் சோகத்தையும் எளியதாக தன்னுள்ளே ஒரு அசாதரணக்கலப்பாக, கவிதையாக உருவாக்கியிருக்கின்றது.

அம்ரிதாபிரிதம் தனது முன்னுரையில் தற்போதைய பஞ்சாபிக் கவிதைகள் கோபத்தோடும், வலிகளோடும் மரபை உடைத்துக் கொண்டு புதுச் சக்தியுடன் பிறக்கின்றனவென்றும் ஓரளவு விமர்சகக் கணிப்புடன் சுட்டிக்காட்டுகையில் தற்போதய பஞ்சாபிக் கவிதை கடந்து வந்த தூரமும், அவற்றின் முன்னுல் விரியும் பரப்பும் நம் கண்ணில் படுகின்றது.

வங்காள இலக்கிய வரலாற்றை சுருக்கித் தனது முன்னுரையாகத் தந்திருக்கின்ருர் லோக்நாத் பட்டாச்சார்யா. ஐரோப்பிய இலக்கிய பாதிப்புக்கள், மற்ற இந்திய மொழிகளுக்கு முன்னர் வங்காள இலக்கியத்தில் செயல்பட்டதும், தாகூரின் நிழல் இன்னமும் அங்கு படிந்திருப்பதுமே நமது கவனிப்பிற்குக் கிடைக்கின்றது. பட்டாச்சார்யா, முதிய வங்காளக் கவிஞர்கள் பதிஞேறுபேர்களின் 45 கவிதைகளைத் தொகுத்திருக்கிருர்.

வங்காள மொழித் தொகுப்பில், ஒரு நீண்ட பாரம்பரியத்திஞல் உண்டாகும் முதிர்ச்சியும், கவிதைகளில் முழுமையும், நமக்கு நிறைவைத் தருகின்றன. தெளிவாகத் தான் இருந்து, வரும் ஒளியைப் பிரித்துக் காட்டும் படிகங்கள் போல 'தூய கவிதை' செய்யும் ஜீபானந்ததாஸின் ஐந்து கவிதைகள், அவரது மற்ற கவிதைகளைத் தேடச் செய்யும் ஒரு முன்னேடியாக இருக்கின்றன. அவருடைய புகழ் பெற்ற ''பாணலதாஸென்'' என்ற கவிதையின் ஆங்கில மொழிபெயர்ப்பை இத்தொகுப்பில் சேர்த்திருக்கலாம். கவிதையை இப்போது கை விட்டு விட்ட சமார்ஸென்னின் முந்தைய படைப்புகள் எண்ணிக்கையில் குறைந்தவை எனினும், வங்காளக் கவிதையுலகில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றவை என்று கூறப்படுகின்றது.

சமார் ஸென்னின் சிறப்பு, கவிதையில் இறுக்கத்தையும், இவ்விறுக்கத்தை மீறிச் சீறிவரும் உணர்வோட்டங்களென்று இத்தொகுப்புக் கவிதைகள் காட்டுகின்றன. இவரது கவிதைகளில்,

மார்க்ஸின் இயக்கவியல், வலிந்து திணிக்கப்படாமல் இயல்பாக பிறக்கின்றன. விஷ்ணுடேயின், அற்புதமான துடிப்புள்ள கவிதை "சித்திரம் மூன்று".

தமிழ்க் கவிதைகளை இத்தொகுப்பிற்காகத் திரட்டித் தந்திருப்பவர் தி. ஜானகிராமன். கோபம், மரபை உடைத்து வருதல்ஆகியவை புதிய போக்குகளாக, மற்ற மொழிகளைப் போலவே, தமிழிலும் இயங்குவதாக, வரலாற்று நோக்குடன், விசாலமான பார்வையுடன் எழுதப்பட்ட தனது முன்னுரையில் அவர் குறிப்பிடுகின்றார்.

வரலாற்று நோக்கில் விசாலமான பார்வையுடன் தொகுக்கப்பட்டதால் தமிழ்க் கவிதைகள் பாரதியில் தொடங்கி, ச. து. சு யோகியார், பாரதிதாசன், தேசிக விநாயகம்பிள்ளை ந. பிச்சமூர்த்தி என்று வரும் பட்டியல், எங்கேயோ திரும்பி திருலோக சீதாராமையும், சிட்டியையும், கலைவாணனையும், கம்பதாசனையும், சோழுவையும், துறைவனையும் விட்டுவிடாது இழுத்துக் கொண்டு, செல்லப்பாவையும், சி மணியையும், ஷண்முக சுப்பையாவையும், ஞானக்கூத்தனையும், ஐராவதத்தையும் அழைத்துவந்து, மறுபடியும் எங்கோ திரும்பிப் போய் வெல்லம் வெங்கடபதியை தட்டி, கூட்டிக்கொண்டுவந்து, சிற்பி, நா. காமராசன், கோ. ராஜாராமென்று முடிகிறது. செத்தவர்கள் முதல், அவருக்குப் பிடித்த சின்னவர்கள்வரை யாரையும்விடவில்லை. அசாத்தியமான ஆசை, சாதனை. புண்ணியத்தால் நான்கு கவிதைகள் பாரதிக்கு, எதற்கென்று தெரியாமல் இரண்டு யோகியாருக்கு, மற்றவர்களுக்கு நபர்கள் அதிகமானதால் தலா ஒன்றுவீதம் எல்லாமாக முப்பது கவிஞர்களின் 34 கவிதைகள். மற்றமொழிகளை விடத் தமிழுக்குப் பக்கங்கள் பத்து அதிகம். தொகுப்பை ஏதாவது ஓரிடத்தில் முடிக்கத்தான் வேண்டும். இருந்தாலும், க. நா. சுவையும், நகுலனையும், பசுவய்யாவையும், இன்னொரு கோடியிலிருந்து கண்ணதாசனையும். பொன்னடியானையும், மோகன சுந்தரத்தையும், இன்னும் ஆறே ஆறுபக்கங்களில் சேர்த்திருந்தால், தி. ஜானகிராமன் எதிர்பார்த்த முழுமை இத் தொகுப்பிற்குக் கிடைத்திருக்கும்.

இத் தொகுப்பின் பெரிய சேவை, மற்றொரு கோணத்தில், வெளியே செல்லும் தமிழ்க் கவிதைக்கு நேரக் கூடிய பெரியவிபத்தை எடுத்துக் காட்டியிருப்பது. பாரதியின் நந்தலாலா கே. சந்திரசேகரனின் மொழிப்பெயர்ப்பால் "In the blazing fire I poke my fingers Nandalala only to feel the ecstacy of thy touch என்று நாய்படாத பாடு படுகின்றது. "Poke my fingers" Indeed!. 'தாட்' இதழில், எம். சி. காப்ரியல், "Made in heaven man is divine" என்றும், "I deny myself / yet I also am/என்றும், "In memory's backyard" என்றும் மொழிபெயர்கப் பட்டவைகளைப் பார்த்து வருத்த முற்றிருக்கின்றார். தமிழ்க் கவிதைகளில் பெரும்பாலான்வை பி. ஜி சுந்தரராஜனால் மொழி பெயர்க்கப்பட்டவை. இவற்றிற்கு மாறாக, ஷண்முக சுப்பையாவின் "குசலம் கேட்டால்" என்ற கவிதையை நல்ல ஆங்கிலத்தில் அளித்திருக்கின்றார் என். வி. ராஜாமணி. அசோகமித்திரனின் ஆங்கிலமொழியாக்கங்களில், ஆங்கிலம் சரியாக அமைந்திருந்தால், சில சொற்கள் தவறிப்போக, கவிதையும், உணர்ச்சியும் தம் சக்தியை இழந்து விடுகின்றன; இருப்பினும் ஓரிரு இடங்களில் பிர

காசமான வரிகள் அற்புதமாக ஆங்கிலத்தில் மறுவாழ்வு பெறுகின்றன. ''தாய்ப் பாலை நிறுத்தல் போல தாய்ப் பொய்யை நிறுத்தலாமா'' என்ற ஞானக்கூத்தனின்வரி, ''Wean me mother when you like/ But feed me your Lies / for all time' என்று ஆங்கிலமாகும்போது பொருள் உணர்வின் அடிப்படையில் மூலத்திற்கும், மொழி பெயர்ப்பிற்கும் உள்ள இடைவெளி குறைந்து சிலிர்ப்பை தருகின்றது.

உள்ளடக்கத்தில் விரிவான பார்வைகளையும், வேறு வேறு உருவங்களையும் எடுத்துக் காட்டும் இத் தொகுப்பு தமிழ்க் கவிதைகள் தற்போதைய தமிழ்க்கவிதைகளின் வீச்சுக்களையோ போக்குக்களையோ சரியானமுறையில் சுட்டிக்காட்டுவதாகக் கூறமுடியவில்லை. தொகுப்பிற்காக தி. ஜானகிராமன் ஒவ்வொரு கவிஞரிடமும், சிறந்த மூன்று கவிதைகளைக் கேட்டிருந்ததாக தெரிகிறது; கிடைத்தவற்றில் சிறந்தவற்றைத்தான் அவரும் தேர்ந்தெடுத்திருப்பார். எனினும் நமக்கு மிஞ்சும் நிராசைக்கு, தொகுப்பில் சிதறிப்போகும் ஒரு பரவல் தன்மையும் தெளிந்த கண்ணோட்டத்தோடு வலுவான, தைரியமான ஒரு தேர்வும் இல்லாததுமே காரணங்களாக நமக்குத் தெரிகின்றன. இதற்கு ஈடுசெய்வதுபோல் தி. ஜானகிராமன் சங்ககாலத் தமிழ்க் கவிதையிலிருந்து தற்காலத் தமிழ்க் கவிதை வரை தொடர்ந்துவரும், தமிழ்க் கவிதையின் உயிர்நாடியை தன் முன்னுரையில் தொட்டுக் காட்டியிருக்கின்றார். இம் முன்னுரையைப் படிக்க நேரும் பிறமொழியினர், ஒரு விமர்சக நோக்கின்மையைக் கூட மறந்துவிட்டு தமிழ்க் கவிதையின் தொன்மையை ஆழமாகவே உணர்வார்கள்.

பொதுவாக, மோசமான மொழிபெயர்ப்புக்களையும், சமனற்ற தன்மையும் கொண்டிருக்கும் இம் மும் மொழிப் தொகுப்பினால் கிடைக்கக் கூடிய பயன்கள். இத் தொகுப்பிற்கான பொருள் சக்தி மற்றும் உழைப்புச் செலவுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, மிகவும் குறைவாகவே இருக்கும். புத்தக அச்சும், கட்டிடமும் கூட குறைந்த பட்ச அழகை எட்டவில்லை. கையில் கிடைத்த பிரதிகளில், பல பக்கங்களில் விதவிதமான கறைகள் வேறு ரூ 35 விலையில் இத் தொகுப்பு வாசகர்களையோ நூலகங்களையோ சேருமா என்ற கேள்வி எழுகிறது. இத்தகைய வெளியீட்டால் ஈடுபட்ட கவிஞர்களுக்கும் தொகுப்பாசிரியர்களுக்கும் ஏமாற்றமே மிஞ்சியிருக்கும். இத் தொகுப்பைக் கண்ணுறும் மற்ற மொழிக் கவிஞர்கள் கூட, முதலில் உற்சாகமாக ஒப்புதல் தந்திருந்தாலும், இத்தகைய தொகுப்பு தங்கள் மொழிக்கும், தங்களுக்கும் மீளாத அவமதிப்பைத் தேடித்தருமென்று தங்கள் முடிவைமாற்றிக் கொள்ளக்கூடும்.

இந்தியப் பண்பாட்டுறவுக் கழகம், உடனே இத் தொகுப்பின் பிரதிகள் யாவற்றையும் திரும்பப்பெற்று அழித்துவிட்டு, இத்துறையில் ஞானம் உள்ள ஒரு பொது ஆசிரியரின் கீழ் இத் தொகுப்புகளை மறுபடியும் வெளியிட்டால், தற்கால சிறந்த இந்தியக் கவிதைகளைப் பற்றிய ஒரு விரிவான கண்ணோட்டம் தரவேண்டுமென்ற தனது நோக்கத்தை நல்ல முறையில் செயல் படுத்துவது சாத்தியமாகும்.

—பதி

மெய்ப்பாடுகள்

சா. கந்தசாமி

கபாலி கதவை உதைத்துத் திறந்து கொண்டு உள்ளே சென்ருன். வீட்டில் விளக்கு இல்லை. இருண்டு இருந்தது. நான்கு மாதமாக விளக்கேற்றி வைத்துக் கொண்டிருந்தாள் சரஸ்வதி. இப்போது அவள் இல்லை. இருந்தால் வாசலில் ஒரு சின்னக் கோலம் போட்டிருப்பாள்; பூச்சூடி வாசலில் காத்திருப்பாள். இவனைக் கண்டதும்—புதிதாகக் காண்பது போல கண்ணும் உதடும் சிரிக்க—கரம் பிடித்து உள்ளே இட்டுச் செல்லுவாள். கெட்ட வார்த்தைகள் சொல்லி இவனை முத்தமிடுவாள். கெட்ட வார்த்தைகளின் பளு தாங்காமல் கபாலி நாணமுறுவான். இவன் நாண நாண அவளின் பரிகாசம் கூடும். இவனின் மீசையை மேல் நோக்கித் திருகிவிட்டு, "என்ன மீச, ஆம்பள மீச இப்படியா இருக்கும்?" என்று சிரிப்பாள்.

சரஸ்வதி சொல்லிச் சொல்லிதான் கபாலி மீசையைப் பெரிதாக வளர்க்க ஆரம்பித்தான். மூன்று மாதத்திற்கெல்லாம் மீசை மேல் உதட்டை மறைத்துக் கொண்டு வந்தது. நன்ருக மீசையைத் திருகி, "சரசு, இப்ப பாரு ஐயாவ?" என்ருன்.

வீட்டைப் பெருக்கிக் கொண்டிருந்த சரஸ்வதி திரும்பாமல், "மசுரு இருந்தா போதுமா?" என்று கேட்டாள்.

"என்ன? என்ன சொன்ன?" அவள் புட்டத்தில் அடித்தான்.

சரஸ்வதி துடைப்பத்தைச் சட்டென்று கீழே போட்டுவிட்டு நிமிர்ந்தாள். இவன் கோபத்தோடு அவளையே பார்த்தபடி இருந்தான். கருப்பு நாய் வாலைக் குழைத்துக் கொண்டு உள்ளே வந்தது. சரஸ்வதி நாயைத் தன் பக்கமாக அழைத்து, இவனைப் பார்த்தபடி, "எம்மாம் பெரிய நாய்—" என்ருள். இவன் பேசாமல் இருந்தான். அவள் ஓரடி முன்னே சென்று அவன் இரண்டு கையையும் பற்றி, "யாரு வூட்டு நாயோ, வழி கெட்டு வந்திருக்கு. நாம்பளே வச்சிக்கலாமா?" என்று கேட்டாள்.

"யாருதும் இல்ல. நம்பளதுதான். நான்தான் அடுச்சு வெறட்டினேன்"

"நாய் நல்லா இருக்கே. எதுக்கு வெறட்டினே"

"எம் பொண்டாட்டி நாய்—"

"நல்ல ஆம்பள. பொண்டாட்டி ஓடினு, நாயையும் ஓட்டி அடிக்கணுமா?"

"அதுக்கில்ல. ஓட்டுல படுத்துக்கிட்டு லோலோன்னு கத்துச்சு"

நாய் சரஸ்வதி பக்கம் திரும்பியது. கையைச் சொடுக்கினாள். அது வேகமாக அவள் பக்கம் ஓடி வந்தது. இவன் காலை மடக்கி அதன் வயிற்றில் உதைத்தான். நாய் பந்துபோல சுருண்டு விழுந்து, எழுந்து பெரிதாகக் கத்திக் கொண்டு ஓட ஆரம்பித்தது.

"நல்ல ஆம்பள—"

கபாலி ஒரு சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டு கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்தான். பழசெல்லாம் ஏன் மறுபடியும் நினைவுக்கு வருகிறது. போட்டது காணவில்லை எனப்பட்டது. இன்னும் நாற்றைம்பது போட்டிருக்கலாம். மடியைத் தடவிப் பார்த்தான். ஒரு சுருட்டும் வத்திப் பெட்டியும் தட்டுப்பட்டன. சுருட்டை எடுத்துக் காதில் சொருகிக் கொண்டு தன்னை மறந்தது போலப் பாட ஆரம்பித்தான். பாட்டு லயங் கெட்டு சரஸ்வதி நினைவைக் கொண்டு வந்தது.

ராமுவைப் போலீஸ் பிடித்துக் கொண்டு போனதும் சரஸ்வதி வந்தாள். அவளுக்கு ராமு எத்தனையாவது கணவன் என்பது இவனுக்குத் தெரியாது. அதைத் தெரிந்து கொள்ளும் ஆவலும் இவனுக்கு இல்லை.

கபாலிக்குத் தான்தான் பெரிசு; தன் விஷயந்தான் முக்கியம். மற்றதெல்லாம் இரண்டாம் பட்சம். இவனின் அக்கறையின்மையே சரஸ்வதிக்கு எரிச்சல் ஊட்டியது. முதல் கணவன் போலவே இருப்பதாகவும் பட்டது.

ஒரு நாள் படுக்கையில் அவளாகச் சொன்னாள்: "உன்ன பாக்கச்செல்லாம் எங்க ஊட்டுக்காரு ஞாபவம் வருது"

"சீக்கரமே வந்துடப் போறுனே"

சரஸ்வதி திடீரென்று படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து இவன் கையை அழுந்தப்பற்றி தொண்டை யடைக்க, "எங்க ஊட்டுக் காரு அது இல்ல; அத வுட்டுட்டு வந்துதான் இப்படி நிக்கறேன்" என்றாள்.

"நீ என்ன சொல்லுற—" அவள் சொல்வதைப் புரிந்துக் கொள்ள வேண்டும் போல கபாலிக்குத் தோன்றியது. அவள் மடியில் காலைப் போட்டு தலையசைத்தான். இவன் முகத்தைப் பார்க்க வெட்கமுற்றது போல சுவரைப் பார்த்துக் கொண்டே தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள்.

சரஸ்வதிக்கு பதினேழாம் வயதில் கல்யாணம். மாப்பிள்ளை மாமன்; தாய் மாமன். ஒரு வருஷம் குடும்பம் சரியாக நடந்தது. வேலையாக அவள் கணவன் வெளியூருக்குப் போனான். அவன் சென்ற மூன்றாவது நாள் சொல்லி வைத்தாற்போல ராமு தன் அக்கா வீட்டிற்கு வந்தான். அது சரஸ்வதி வீட்டிற்கு எதிர் வீடு. ராமு

பேச்சும், பழக்கமும் சரஸ்வதியை ஒரேயடியாகக் கவர்ந்தது. அவனைப் போன்ற ஒருவனை அடைய பாக்கியம் செய்திருக்க வேண்டுமென்ற திட நம்பிக்கையோடு கணவன் வருவதற்கு முன்னே இவனோடு வந்தாள். வந்தபிறகுதான் ராமு சிறுமைகள், திருடுவது, சண்டை போடுவது, ஜெயிலுக்குப் போவது—எல்லாம் தெரியவந்தது. ஆனாலும் சரஸ்வதிக்கு அவன்மேல் வெறுப்பு வரவில்லை.

கபாலி அவனை ஜெயிலில் பார்த்தான். இவனைப் போலவே திருடிவிட்டு வந்திருந்தான். முதலில் கபாலி அவனைப் பொருட்படுத்தவே இல்லை; ஒரு சாதாரண திருடனென்று உதறினான். ஆனால் கொஞ்சம் பேசியதும்—பழகியதும்—நட்பு இவனை இறுக்கியது. கடைசி மாதத்தில் இணைபிரியாத நண்பர்களானார்கள். வெளியே போகும் போது—தன்னை வந்து அவசியம் பார்க்கும்படி இவனைக் கேட்டுக் கொண்டு சென்றான். இவன் தலையசைத்து, "அதான் முதெல்ல" என்றான். ஆனால் வெளியே வந்ததும் — இவன் போகவில்லை. போக வேண்டாமென்று இல்லை. நாளைக்கு நாளைக்கு என்று தள்ளிப் போயிற்று.

ஒரு மாதம் கழித்து கபாலி ராமுவின் வீட்டிற்குச் சென்றான். இவன் போனபோது ராமு வீட்டில் இல்லை. சரஸ்வதி, "காலயில போனது. எப்ப வருமோ தெரியாது" என்றாள்.

"வந்தா, கபாலின்னு சொல்லு—"

"அப்புறமா வறியா!"

கபாலி யோசித்தான்.

"ரெண்டு நாளு களிச்சி வாரேன்"

ஆனால், அடுத்த நாளே ராமு இவனைத் தேடி வந்தான். அவன் வந்த போது, கபாலி தன் மனைவியோடு சண்டை போட்டுக் கொண்டிருந்தான். ராமுவைக் கண்டதும்—பொங்கிய கண்ணீரைத் துடைத்தவாறு—தன் பெண்டாட்டியின் நடத்தையைப் பற்றி—தன் முன்னேயே முனுசாமிகூட சினிமாவுக்குப் போவதுபற்றிச்சொன்னான். மனைவியைப்பற்றி குறை சொல்லும் இவன்மீது திடீரென்று ராமுவுக்கு எரிச்சல் மூண்டது.

"இது, அசிங்கமா இல்ல—"

"—முனுசாமிதான் அவளுக்கு புருஷனும்—"

"கபாலி, அதையெல்லாம் பெரிசாநெனெச்சிக்கக்கூடாது" என்று இவன் தோள்மீது கை போட்டு தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். போகும்போதே சொன்னான். "உனக்குத் தெரியுமா? நான் சரச, ஒரு நாளும் அடிச்சது இல்ல". அவன் சொன்னது நம்ப முடியாதது போல இவனுக்குத் தோன்றியது. மனைவியை அடித்தே அறியாதவனிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் இவன் முன்னே சென்றான்.

இவர்கள் வீட்டிற்குச் சென்றபோது சரஸ்வதி வாசலில் இருந்தாள். இவனைப் பார்த்ததும் அடையாளம் தெரிந்துக் கொண்டு புன்னகை பூத்தாள்.

ராமு இவனை உட்கார வைத்துவிட்டு "இரு வந்துடறேன்" என்று ஒரு பையோடு கிளம்பினான்.

"நானும் வாரேனே-"

"எதுக்கு, இப்ப வந்துடறேன்—" ராமு வேகமாகப் படி இறங்கிச் சென்றான்.

சரஸ்வதி இவன் முன்னே வந்து, "இப்ப வந்துடும்" என்றாள்.

இவன் சிரித்தான்.

"நீ வந்துட்டுப் போனதும் அது வந்துடுச்சு. சொன்னதும் ஏன் இருக்கச் சொல்லுலேன்னு ரொம்ப கோவிச்சுக்கிச்சு"

கபாலி தலையசைத்தான்.

"அதுக்கு சிநேகிதம்ன்னா உசுரு"

"ஆமாம், ஆமாம்"

ராமு திரும்பி வந்ததும், பையிலிருந்த புட்டிகளை எடுத்து வெளியே வைத்தான். அப்புறம் சில பொட்டணங்கள். சரஸ்வதி கொண்டு வந்து வைத்த கிளாசில் சாராயம் நிரம்பியது. இவனுக்கு எதிரே சரஸ்வதி உட்கார்ந்தாள். அவள் குடிப்பது கபாலிக்கு ஆச்ச ரியமாக இருந்தது.

ராமு இவன் தோளில் கை போட்டு, "அவ ரொம்ப நாளா குடிக்கறா?" என்றான்.

சரஸ்வதி கையிலிருந்த கிளாசைக் கீழேவைத்து சிரித்தபடியே, "பதினஞ்சு வயசுல இருந்து குடிக்கறேன். எங்க அப்பாதான் எனக்குக் குடிக்கக் கத்துக் கொடுத்துச்சு" என்றாள்.

"—நம்ப நாலு வருஷமாத்தான்"

' இன்னும் கொஞ்சம்"

"செத்த போவுட்டும்"

"அதெ இங்க ஊத்து" சரஸ்வதி தன் கிளாசை நீட்டினாள்.

"இல்ல போ—" ராமு தானே அதைக் குடித்தான்.

கபாலிக்குப் புகலிடம் கிடைத்தது போல இருந்தது. ராமு வீட்டிற்கு அடிக்கடிச் செல்ல ஆரம்பித்தான். ஒவ்வொரு முறையும் கோழி; தண்ணீர்; கூட சரஸ்வதி. இவனுக்குச் செலவு செய்ய மனைவியும் கணவனும் தயங்கவில்லை. புதுப் புது நோட்டாகப் புழங்கியது. இவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு நாளைக்குக் கேட்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டான். ஆனால் கேட்கவில்லை. மனைவி, முனுசாமியோடு போய்விட்ட ஏக்கத்தில் இவன் படுத்திருக்கும் போது, சரஸ்வதி வந்தாள். அவள் வருகை இவனுக்கு வியப்பு அளித்தது. ஒன்றும் தோன்றாதவனாக ' வா, வா" என்றான்.

சரஸ்வதி சுற்றும் முற்றும் பார்த்தபடி கீழே உட்கார்ந்தாள்.

''ராமு எங்க—''

''அத போலீசு புடுச்சுக்கிட்டு போயிடுச்சு''

கபாலீ கட்டிலிலிருந்து எழுந்து உட்கார்ந்தான்.

''பெரிய கேசா''

''நோட்டு மாத்தச்ச புடுச்சுட்டாணுவோ''

''அப்ப ரிட்டிடுவாணுவோ''

அவள் தலையசைத்தாள்.

''கஷ்டந்தான்''

''அது போனதிலே இருந்து ராஜி பய வூட்டையே சுத்திக்கிட்டு இருக்கான்''

''எந்த ராஜி''

''அதுகூட கெடப்பானே, ஒரு நொண்டி. அது''

''அவனு—''

''அதான்''

கபாலி யோசித்தான்.

''எனக்கு பயமா இருக்கு. ராத்திரில வந்து வந்து கதவத் தட்டுறான்''

''.....................''

''ஆளுதான் நொண்டி''

''நீ கொஞ்ச நாளைக்கு இங்கயே இருந்துடேன்—''

அவள் தலையசைத்து தூணில் சாய்ந்து கொண்டாள். இவனுக்கு அவள் குடிப்பாள் என்று தோன்றியது. உள்ளே போய் சாராய புட்டியை எடுத்து வந்து அவள் எதிரே வைத்தான். அவள் புட்டியை எடுத்துப் பார்த்தாள். பாதிக்கு மேல் சாராயம் இருந்தது. இவன் பக்கம் திரும்பி ஒரு புன்னகையை வீசிவிட்டு கொஞ்சம் உள்ளே ஊற்றிக் கொண்டாள். இவன் அவள் முகத்தையே பார்த்தபடி இருந்தான்.

சரஸ்வதி புட்டியைக் கீழே வைத்து விட்டு, புடைவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்து, ''திங்க என்ன இருக்கு?'' என்று கேட்டாள்.

''இருந்தத எல்லாம் இப்பத்தான் தின்னேன்''

''நீ தின்னு போதுமா?''

''உனக்கு என்ன வேணும்''

"ஈர, வறுத்தக் கறி—ஏதாச்சும்"

கபாலி எழுந்தான்.

"காசு இருக்கா?"

"காக்கா கடன் கொடுப்பான்"

"கடன் எதுக்கு? இந்தா—" மடியிலிருந்து கசங்கிய பத்து ரூபாய் நோட்டை எடுத்துப் போட்டாள் சரஸ்வதி.

கபாலி பிரியாணியும் வறுத்தக் கறியும் வாங்கி வந்து எதிரே வைத்தான்.

"பிரியாணியே வாங்கியாந்துட்டியே—"

"உனக்குப் பிடிக்கும்ன்னுதான்"

"அப்ப இந்தா—உனக்கும்—" ஒரு பிடி அள்ளி இவனுக்கு நீட்டினுள்.

"இல்ல வேணும்"

"சீச்சீ...தின்னுன்னு"

சரஸ்வதி தங்கியது கபாலிக்கு மகிழ்ச்சி அளித்தது. அவள் பேச்சும் நடத்தையும் குதூகலமளித்தது. தனக்கு ஒரு மனைவி இருந்தது; அவளோடு சண்டைபோட்டது; அவள் முனுசாமியோடு ஓடிப் போனது—எல்லாம் இவன் நினைவிலிருந்து மறைந்தது. பிரயாசை ஏதுமின்றியே கும்பலிலிருந்து விலகி ஒரு வேலையை ஏற்றுக் கொண்டான். வேலை சற்று தூரத்தில்; எட்டு மைலுக்கு அப்பால். ரயிலிலிருந்து கல் இறக்குவது. ஆரம்பத்தில் கஷ்டமாக இருந்தது. உடம்பெல்லாம் வலித்தது. விட்டுவிட்டு ஓடி விடலாமா என்று கூட நினைத்தான். உடனே சரஸ்வதி ஞாபகம். வேலையில் தன்னை ஐக்கியமாக்கிக் கொண்டான். சரஸ்வதி இவனைப் பரிகாசம் பண்ணுவாள், "இம்மாம் நல்ல பிள்ளையா" என்று. பெருமிதத்தால் நெஞ்சம் விம்மும். "இப்ப எம்மாம் நிம்மதியா இருக்குத் தெரியுமா?" என்று சோற்றுப் பொட்டணத்தோடு காலையிலே புறப்படுவான். திரும்பிவர இரவு ஏழரை ஆகிவிடும். சில நாட்களில் இன்னும் கூடுதலாகக்கூட ஆகும். ஆனுல் அதற்கெல்லாம் இவன் வருந்தியதே இல்லை... மாலையில் சாராயம் வாங்கி வந்து அவளோடு குந்திக் குடித்து தன்னை இழந்து தூங்குவான்.

ஒரு நாள் கபாலி அவசரம் அவசரமாக வேலைக்குச் சென்றுன். வேலைக்குப்போன பிறகு ரயில்வே வேகன்கள் வராத காரணத்தால் வேலை இல்லை என்றுர்கள்; மொத்தமாக இருபது பேர்களுக்கு வேலை இல்லை. திடீரென்று வேலை இல்லை என்பது இவனுக்கு மகிழ்ச்சி அளித்தது. சரஸ்வதியை சினிமாவுக்குக் கூட்டிக் கொண்டு போகலாம் என்று பையைப் பார்த்தான். ஐந்து ரூபாய் இருந்தது; இன்னொருவனிடம் மூன்று ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு பஸ்பிடித்து வீட்டிற்கு வந்தான்.

"சரசா" குரல் ஒலிக்க உள்ளே சென்றுன். படுக்கையிலிருந்து சரஸ்வதி எழுந்து வந்தாள். இவன் பார்வை சுற்றுமுற்றும் சென்றது.

“என்ன இப்படி பாக்கிறீங்க?”

“ஆருடீ இப்ப போனது—”

“எங்க?”

கபாலி ஓரடி எடுத்து முன்னே வைத்தான்.

“என்ன, ஏதாச்சும் கனவு கண்டீங்களா?”

“என்னடீ கத வுடுற?”

“உன் பொண்டாட்டின்னு என்ன நெனச்சுக்கிட்டியா”

“என்னடீ சொன்ன தேவடியா?” என்று பாய்ந்து அவள் மயிரைப் பற்றி இழுத்துத் தரையில் தள்ளினன்.

“அட, பொட்டப் பயலே, என்னத் தொட்டா அடிக்கற” தரையில் கையூன்றி எழுந்து இவன் முகத்தில் காறி உமிழ்ந்து நகத்தால் பிருண்டினள்.

கபாலி அவளைக் கையால் இடித்துத் தள்ளி, “இன்னம பேசின செத்த” என்றன்.

அவள் பெரிதாகச் சிரித்து, “நீ வீர சிங்கந்தான் போ” என்றுள்.

“எங்கடீ வெளிய போற”

“நீ யாரு கேட்க”

“என்னடீ நான் யாரா”

“அடப் போடா, கட்டின பொண்டாட்டி மாதிரி அதிகாரம் பண்ண வந்துட்ட”

“என்னடீ சொன்ன?” பாய்ந்து உதைத்துக் கீழேதள்ளினன்.

சரஸ்வதி தரையில் உருண்டு, “என்னக் கொள்ளுருனே; என்னக் கொள்ளுருனே” என்று கத்தினள்.

சாலையில் பெரிய கூட்டம். ஆண்கள், பெண்கள், குழந்தைகள்; முன்னே இடம்பிடிக்க முண்டிக் கொண்டிருந்தார்கள். நொண்டி ராஜி சரஸ்வதிப் பக்கம் வந்தான். அவனைக் கண்டதும் பொலபொலவென கண்ணீர் உகுத்து, “பாருடா தம்பி, இவன் என்ன கொள்ளுறத?” என்றுள்.

“அவன் யாருடீ என்னக் கேட்க” கபாலி அவனை நோக்கிப் பாய்ந்தான்.

“போடா அப்பால—” நொண்டி ராஜி கபாலியின் மார்பில் கைவைத்துத் தள்ளினன்.

“நீ யாருடா அவளுக்கு?” கபாலி அவன் கன்னத்தில் அறைந்தான். பலமான அறை; அவனுக்கு ஒருகணம் ஒன்றும் தெரியவில்லை. தடுமாறினன். குனிந்து மடியிலிருந்த சைக்கிள் செயினை எடுத்து திடீரென்று கபாலியின் மண்டையில் வீசினன். கபாலி பெரிதாக அலறிக் கொண்டு கீழே விழுந்தான். பாய்ந்து அவன் எழுவதற்குள் இன்னெரு முறை அடித்தான். உயர்ந்த கபாலியின் தலை கீழே சாய்ந்தது.

கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகப் பின்னல் நகர்ந்தது. ●

கசடதபற

(மாத இதழ்)

தனி இதழ் 50 காசு

ஆண்டுச் சந்தா ரூ. 5/-

மணியார்டர் மூலம் பணம் அனுப்புபவர்கள் தங்கள் முகவரியைத் தெளிவாக எழுதியனுப்பவும். சந்தாதாரர்கள் இதழ் பிரதி மாதம் 7 தேதிக்குள் கிடைக்காவிட்டால் தெரிவிக்கவும்.

கதை, கட்டுரை, கவிதைகளை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

பிரசுரிக்க இயலாதவற்றைத் திரும்பப் பெற போதிய தபால் தலைகள் இணைத்து அனுப்பவும்.

ஆசிரியர் : கசடதபற
I-20, டர்ன்புல் ரோடு
நந்தனம்
சென்னை 600 035

பிரக்ஞை

மாத ஏடு

ஆண்டுச் சந்தா 8/-

அரையாண்டுச் சந்தா 4/-

பிரக்ஞை
8 மகாலட்சுமி தெரு
சென்னை 600 017

நாளை மற்றுமொரு நாளே

ஒருவர் பாக்கி விடாமல் எல்லாருமாக ஒழுக்கம் கெட்டிருந்தால் புதிய நடைமுறைகள் தோன்றக் கூடும். இல்லை என்றால் அந்தச் சமுதாயத்துக்கு ஏதேனும் விபரீதம் நிகழ்ந்து பிரச்னைகள் தீர்ந்து போகக் கூடும். ஆனால் ஒழுக்கம் எந்தக் காலத்திலும் முற்றிலும் கெட்டுப் போவதும் இல்லை அல்லது கெடாமல் உன்னதப்படுவது மில்லை. ஒழுக்கத்தின் இருப்பை மௌனமாக அனுபவிப்பவர்களைக் காட்டிலும் அதைப் பெரிதும் சப்தித்து அனுபவிப்பவர்கள் ஒழுக்கம் கெடுபவர்களோடு எதிரும் புதிருமாக வரிசைப்படுகிறார்கள். கள் உண்பது ஒழுக்கக் கேடென்றால் அதை உண்பவனும் அதை உண்ணாதே என்பவனும் எதிரெதிர்ப்படுகிறார்கள். ஒரு சமுதாயம் வாழ்க்கையின் நிமித்தம் கடைப்பிடிக்கிற உன்னதக் கோட்பாடுகளில் இலக்கிய ஆசிரியனின் பங்கு சிரம காலத்தில் எந்தப் பக்கம் சார்புடையதாக இருந்தாலும் இலக்கியத்துக்கு லாபம்தான். இலக்கியத்துக்கு லாபப்படுகிற எதுவும் அந்த இலக்கியம் புழக்கத்தில் இருக்கிற சமுதாயத்துக்கும் லாபமே. ஆனால் இலக்கியத்தின் நேரடி உதவியைக் கோராமலேயே சமுதாயம் தனது நடை முறைகளைக் கவனித்துக் கொள்ள முடியும். ஆகையால் இலக்கிய ஆசிரியன் தனது எழுத்துக்களை சமுதாயம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதில் அர்த்தமில்லை. இந்த உண்மை கருத்தில் கொள்ளப்படும் பொழுது இலக்கிய ஆசிரியனின் நோக்கு விஷயத்தில் ஆழப்படுவதற்கு வாய்ப்புண்டு. தனி மனிதனாகிய இலக்கிய ஆசிரியனைக் காட்டிலும் சமுதாயத்தின் அலுவல்களில் தொடர்ந்த பங்குடையவர்கள் இலக்கிய ஆசிரியனும் அந்த அலுவல்களின் செப்பத்துக்குப் பங்கு கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். இயல்பாகவே விசாலமான நோக்குகள் உடைய ஆசிரியனும் தன்னுடைய நோக்குக்கு விசேஷ வர்ணச் சேர்க்கையைக் கொடுத்துக் கொள்வதுண்டு. ஜி. நாகராஜனின் 'நாளை மற்றுமொரு நாளே' என்கிற நாவல் அவருடைய பார்வையில் சமுதாயம் எப்படிக் கெட்டுக் கொண்டிருக்கிறது என்று காட்டுகிறது.

விருத்திக்குமட்டுமில்லாமல் அந்தந்த ஜீவர்களுக்குக்கிடைக்கக் கூடிய இன்பங்களில் சிறந்த ஒன்றாக உடல் உறவின்பமும் அமைந்திருக்கிறது. அந்த இன்பத்தை மற்றொன்றிலிருந்து பிரித்துக் காட்டும் பொருட்டு சிற்றின்பம் என்று பெயரிட்டிருப்பது மரபின் தவறு. இந்த இன்பத்தின் பொருட்டு சமூகத்தில் சில மனிதர்களிடத்திலே நிகழும் சிக்கல்கள், சச்சரவுகளைக் குறித்து ஜி. நாகராஜன் எழுதி இருப்பது

நாளை மற்றுமொரு நாளே - ஜி. நாகராஜன் - பித்தன் பட்டறை

106-ஏ திண்டுக்கல் ரோடு, மதுரை 625 001 - விலை: ரூ. 4-50

இது முதல் தடவையல்ல. ஆனால் இந்த நாவலில் இது சம்பந்தமான விஷயங்களைத் திரட்டி இருக்கிறார் அவர் என்று தெரிகிறது. அதனால் தானோ என்னவோ இந்த நாவலில் கந்தன் என்பவன் முக்கியப் பாத்திரமாகக் காட்டப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு பாத்திரமும் நாகராஜனுக்கு நாவலுக்குரிய விஷயப் பின்னணியோடு அமைந்திருக்கிறது. விஷய திரவியங்களையும் அதன் காரணமாக எழுந்த அறிவையும் தனித் தனிக் கதைகளுக்கென்று விடாமல் ஒருமுகப்படுத்தும்போது இலக்கிய ஆசிரியனின் கையில் உருவாவது ஒரு பெரும் படைப்பாக அமையக்கூடும். ஆனால் ஜி. நாகராஜனின் 'நாளை மற்றுமொரு நாளே' என்னும் இந்த நாவலை அப்படிப்பட்டதென்று கூற முடியுமா?

நாவலில் வருகிற பாத்திரங்கள் ஒன்றைப் போல ஒன்று ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க முடியாதவை. இந்த நிலைமையிலும் தேங்கிக் கிடக்கும் நீரில் தொலைவில் இருக்கும் சூரியன் பிரதிபலிப்பது போல சில தர்மங்கள் தலைகாட்டுகின்றன. இந்தப் பாத்திரங்களை நிஜ வாழ்க்கையில் பிரதிபலிப்பவர்கள் இருக்கிறார்கள் என்றுதான் நாகராஜன் நாவலைக் கையாளுகிறார் என்றுதெரிகிறது. ஆனால் இத்தகைய மனிதர்களின் மீட்புக்குரிய சாதனங்களில் நம்பிக்கை உடையவராக இல்லை. அந்தச் சாதனங்களும் இந்த ஒழுக்கக் கேட்டில் சம பங்குடையவை என்பது நாகராஜனின் அவதானிப்பு.

'அது மார்க்கம் இல்லாதது	அபாதா
அது வரம்பில் அடங்காதது	அனந்தோகாரா
அது தங்குமிடமில்லாதது	அநிகேதா
அது எதுவுமில்லாதது	சூன்யா'

இந்தச் சொற்கள் காதில் விழுந்ததும் முக்கியப் பாத்திரமான கந்தன் திரும்பிப் பார்க்கிறான். அவன் பார்வையில் 'வேறு யாருமில்லை' ஒரு சாமியார்தான் தென்படுகிறார். அவருக்கு டிரம் சாமியார் என்று பெயர் இருந்தாலும் சாராயச் சாமியார் என்று அறிமுகமாகிறார். இடமும் பொருத்தமுள்ள ஒரு சாராயக் கடை. மற்றொரு உதாரணம்:

'ஜீப்புக்குள் ஏற அன்னக்கிளி தயங்கினாள். சப்-இன்ஸ்பெக்டர் அவன் கையை நீட்டவும் அவளும் களுக்கென்று சிரித்துவிட்டு ஜீப்புக்குள் ஏறிக் கொண்டாள். ஜீப்பை ஸ்டார்ட் பண்ணுவதற்கு முன்னால் ஜீப்பின் உள் விளக்கை அணைத்தான் டிரைவர். அன்னக்கிளியின் 'ச்சு' என்ற வக்கரிப்பும், வளையல் ஒலியும், அவற்றைத் தொடர்ந்து ஏட்டையாவின் கனைப்பும் கேட்க இரைச்சல் இட்டுக் கொண்டு டவுனை நோக்கித் திரும்பியது ஜீப்பு'.

அச்சில் 172 பக்கத்துக்கு வந்திருக்கும் இந்த நாவல் அதில் கூறப்பட்டிருக்கும் கதையினால் வாசகனை சங்கடப்படுத்துகிறதென்றால், நாவலை உருவகித்திருக்கும் முறையும், சில பக்கங்களில் ஆசிரியனின் கூற்றுகளும் நம்மை சங்கடப்படுத்துகின்றன. நாவலைத் தொடங்கும் பொழுது ஜி. நாகராஜன் கூறுகிறார்—

'இது ஒரு மனிதனின் ஒரு நாளைய வாழ்க்கை
நீங்கள் துணிந்திருந்தால் செய்திருக்கக்
கூடிய சின்னத் தனங்கள்.
நிர்ப்பந்திக்கப் பட்டிருந்தால் காட்டியிருக்கக்
கூடிய துணிச்சல்
விரும்பியிருந்தால் பெற்றிருக்கக்கூடிய
நோய்கள்
பட்டுக் கொண்டிருந்தால் அடைந்திருக்கக்
கூடிய அவமானம்
அவையே அவன் வாழ்க்கை.
அவனது அடுத்த நாளைப்பற்றி நாம்
தெரிந்து கொள்ள வேண்டாம். ஏனெனில்
அவனுக்கும்—நம்மில் பலருக்குப்
போலவே—
நாளை மற்றுமொரு நாளே!'

இந்தக் கூற்றுகளை ஆராய்ந்தால் அவை விபரீதமான கேள்விகளுக்கு இடம் கொடுக்கின்றன. அந்தக் கேள்விகளில் ஒன்றைமட்டும் கவனிக்கலாம். நாவலின் முக்கிய பாத்திரமான கந்தனைப் போலவே நம்மில் பலருக்கும் நாளை மற்றுமொரு நாளே என்கிறார் ஆசிரியர். அது எப்படி சாத்தியமாகும்? இந்தக் கூற்று கலைக்குள்ளான நிஜத்துக்கும் கலைக்கு வெளியிலான நிஜத்துக்கும் ஒற்றுமை கற்பித்துக் குழப்புகிறது. கதையும் வாழ்க்கையும் ஒரே நிஜத்தவை என்றால் கதைக்குள் நாம் பிரவேசித்துவிட முடியாதா? முடியும் என்றால் இது புனை கதையைச் சார்ந்ததா?

இந்த நாவலை என்னுடன் படித்த இலக்கியத் தொடர்பற்ற சில நண்பர்கள் இது தமிழில் புதிய வகையான நாவல் இல்லையா என்று என்னிடம் கேட்டார்கள். இந்த எண்ணம் எந்த அடிப்படையில் உருவாகிறது என்பது இப்பொழுதே வாசகர்களுக்கு விளங்கியிருக்கும்.

—ரங்கநாதன்

நீர் வாத்துக்கள்

இலக்கியம் படைக்கிறாயா?

இல்லை.

தெரியாதா உங்களுக்கு

வாத்துக்கள் ஒருபோதும் குளிப்பதில்லை.

—ஆதிநாதன்

ஞாதுரு

ஓவியம் வரைந்தேன் ஒன்று
அதிலொரு மனிதன் வந்தான்
அவன் முகம் மேசை மீது பதிந்திட
இமைகளின் ரோமம் நீண்டு நெற்றிமேல் விரைக்கக் கண்ணை
மூடினேன் வெறுப்புக் கொண்டு
அவன் என்னைக் கேட்டான் கண்களை எதற்கிவ்வாறு
மூடினாய்? உன்னால் பார்க்க
முடிந்ததா? என்றேன். இப்போ நான் உன்னைப்
பார்த்துக்கொண்டு
அல்லவா இருந்தேன் என்றான்
மடிப்புகள் பலவாறாகப் பண்ணினேன் அவனைக் கண்கள்
வெளிப்படக் கூர்மையாக்கிச்
சென்று பார் மேலே என்றேன்.
புலப்படாக் காக்கை தூக்கிச் செல்கின்ற கரண்டியைப்போல்
ஏகினான் அவனும் ஆனால்
அழகென்று வானைக் கூறி

— ஞானக்கூத்தன்

என் வீடு

தெரு முக்கில் ஒளி திரும்ப
மனிதராய் நிழல்கள் போகும்
முகங்கழுவப் போனால் அங்கே
கவிசொல்லி மரங்கள் ஆடும்.
புகைமூட்ட கவிதை நெஞ்சாய்
ஒட்டடை உயரே தொங்கும்.
சிலநேரம் குருட்டு வௌவால்
திக்கற்றுச் சுற்றிப் போகும்.
மூலையில் மேலே அவளாய்
சலிக்காது புடுங்கும் பல்லி.
இலக்கங்கள் சிதறி எனக்கும்
இருக்குது வீடு ஒன்று.

—மாலன்

அக்கம் பக்கம்

எழுத்தாளர்களுக்கு அரசாங்கமும்—தனியார் நிறுவனங்களும் பல்வேறு நோக்கோடு பரிசு வழங்கி வருகின்றன. பல சந்தர்ப்பங்களில் தனியார் நிறுவனங்களின் பரிசு உண்மையான எழுத்திற்குப் போவதுண்டு.

தமிழில் முதன் முறையாக கவிதை, நாவல், சிறுகதைக்கு (ஏதாவது ஒன்றுக்கு மட்டுமே) பத்தாயிரம் ரூபாய் பரிசு வழங்க எம்.ஏ.சி. அறக்கொடை நிறுவனம் முன்வந்திருக்கிறது.

டாக்டர் ராஜா சர். அண்ணாமலை செட்டியார் பரிசு உண்மையான எழுத்துக்குக் கிடைக்கும் என்கிற நம்பிக்கையுடன் இம்முயற்சியை வரவேற்கிறோம்.

* * *

திரு. மு. கருணாநிதி சுமார் இருபது இருபத்தைந்து ஆண்டுகளாக கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் எழுதி வருகிறார். தமிழ் எழுத்தாளர்கள், விமர்சகர்கள் ஒரு பொழுதும் திராவிட முன்னேற்றக் கழக எழுத்துக்களை பொருட்டாக மதித்ததில்லை. ஆனால், அதிகாரம் அவர்கள் கைக்குச் சென்றதும் இன்றுதான் திரு. கருணாநிதி (திரு. அண்ணாதுரை காலமாகி விட்டபடியால்) எழுதுவதுபோல பாவித்து அவர் எழுத்தின் இலக்கிய நயத்தை—வியக்கத்தக்க மேதையைக் கண்டு கொண்டதுபோல புளகாங்கிதமுற்று, அதை அவர் முன்னேயே சொல்கிறார்கள்; எழுதுகிறார்கள். இதற்கு இரண்டு முக்கியக் காரணங்கள்: ஒன்று திரு. கருணாநிதி அதிகாரம் வகிப்பது. இன்னொன்று அந்தப் பாராட்டுரைகள் திரு. கருணாநிதிக்குப் பிடித்திருப்பது.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் திரு. கருணாநிதியின் தரத்திற்கு (திரு. அண்ணாதுரை அல்லாது) எழுதக் கூடிய திரு. டி. கே. சீனிவாசன், திரு. எஸ். எஸ். தென்னரசு ஆகியோர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கையில் அதிகாரம் ஏதும் இல்லாதபடியால் புகழ்பாடிகள் மொத்தமாகத் தங்களின் புகழஞ்சலிகளை திரு. கருணாநிதிக்கே சமர்ப்பிக்கிறார்கள்.

ஒரு சமயத்தில் யுனஸ்கோ கல்வி கலாச்சார நிறுவனத்தின் உதவி டைரக்டர் ஜெனரலாக இருந்த டாக்டர் ஆதிசேஷையா "உலகத்திலே மூன்று கவிஞர்கள் அதிகாரத்தை ஏற்று நடத்துகிறார்கள். அவர்களுள் திரு. மு. கருணாநிதியும் ஒருவர்" என்று புகழ்ந்துரைத்தார்.

அற்புதமாக கவிஞர் அரசு நடத்தும் இக்காலத்தில் வாழும் பாக்கியம் பெற்ற டி. கே. சி. சிஷ்யர் நீதிபதி திரு. எஸ். மகராஜன் தனது புதிய புத்தகமாகிய 'தெய்வ மாக்கவி'யை திரு. மு. கருணாநிதிக்கு அனுப்பி எழுதியிருக்கிறார். (கடிதங்களை இலக்கியச் செறிவு கருதி 'தமிழரசு' வேண்டிப் பெற்று வெளியிட்டதை, நன்றி கூறி இங்கு தருகிறோம்)

''அன்பு மிக்க

மாண்பு மிக்க

டாக்டர் கலைஞர் அவர்களுக்கு,

அண்மையில் வெளிவந்த 'தெய்வ மாக்கவி' என்ற நூலை கவிக் கண் படைத்த தங்கள் பார்வைக்கு அனுப்பி யிருக்கிறேன்.

அதிலுள்ள முதல் கட்டுரையைப் பார்ப்பதற்காவது தங்களுக்கு நேரம் கிடைத்தால், இந் நூலுக்கு ஜீவன் முக்தி கிடைத்துவிட்டது என்று கருதுவேன். வணக்கம்.''

மாமல்லையில் ஓய்வுக்காகச் சென்ற திரு. கருணாநிதி 'தெய்வ மாக்கவி'யைப் படித்து, அதில் விழுந்திருக்கும் அச்சுப் பிழைகளைச் சொன்னதோடு 'தெய்வ மாக்கவி'யை 'தமிழில் ஒரு தேமாங்கனி' எனப் பாராட்டி பதில் எழுத, அதற்கு திரு. எஸ். மகராஜன் எழுதிய பதில்—

''பேரன்பு மிக்க

கலைஞர் அவர்களுக்கு,

தாங்கள் கைப்பட எழுதிய ஒன்பது பக்கக் கடிதம் கிடைக்கப் பெற்றேன். கடிதம் என்று அதைச் சொல்வது! ஓர் அரிய மரகதப் பதக்கம் அல்லவா எனக்குக் கிடைத்துவிட்டது! அதிலுள்ள அரிய வேலைப்பாடுகளை உற்றுற்றுப் பார்த்து எக்களிப்பும் வியப்பும் விம்மிதமும் அடைந்தேன்.

எக்களிப்புக்குக் காரணம்:

கடல் அலைகள் முழவதிர, வரலாற்றலைகள் இசை பரப்ப, மாமல்லையின் இன்பச் சூழ்நிலையில் தாங்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த நல்லோரையில், என் நூல் 'தெய்வ மாக்கவி'யைப் படித்துச் சுவைத்து, 'அது எனக்குக் கரும்பின் சாறாகக் கிடைத்தது', 'அது தமிழில் ஒரு தேமாங்கனி' என்று மன நிறைவோடு பாராட்டி யிருக்கிறீர்களே, நோபெல் பரிசு கிடைத்தால்கூட எனக்கு இவ்வளவு எக்களிப்பு ஏற்பட்டிருக்காது''.

வியப்புக்கும், விம்மிதத்திற்குமான காரணங்களைக் கூறிவிட்டுத் தொடர்கிறார்—

"பொதுவாக ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் கவிஞர்களை யும், கலைஞர்களையும் ஆதரிப்பார்களே யொழிய, அவர்களே கவிஞர் களாகவும் கலைஞர்களாகவும் திகழ்ந்ததில்லை. விதிவிலக்காக ஒரு தமிழ் மன்னன் கவிபாடுந் திறமையில் தமிழ்க் கவிஞர்களையும் மிஞ்சி நின்றான். இந்த அதிசயத்தைக் கண்டு விம்மிதம் கொண்ட ஒரு கவிஞர்,

"மாணிக்கம் தித்திக்கில் என்னாகும்
மற்ற மதுரங்களே" என்று பாடினார்.

ஒளி வீச்சினால் அழகு செய்ய வேண்டியது மாணிக்கத்தின் வேலை; நாவுக்குத் தித்திப்பை ஊட்ட வேண்டியது கல்கண்டின் வேலை. ஆனால் தாங்களோ இரட்டை வேலையையும் செய்யும் அற் புதச் சித்தராக இருக்கிறீர்கள்.

மாணிக்கம் தித்திக்கில் என்னாகும்
மற்ற மதுரங்களே

என்று சொல்லித் தங்களுக்கு, எழுத்தாளன் என்ற முறையில் அஞ்சலி செலுத்தி, என் விம்மிதத்தையும், நல் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

எஸ். மகராஜன்

குறிப்பு:—நான் எழுதின 'ஒலிச் செல்வம்' என்ற நூலையும், அண்மை யில் மதுரைப் பல்கலைக் கழகத்தில் நான் நிகழ்த்திய 'The Inner meaning of the Human History' என்ற பேச் சுக்களையும் இத்துடன் அனுப்பியிருக்கிறேன். ஓய்வு கிடைக் கும் நேரம் எப்பொழுதாவது அவற்றைப் புரட்டிப் பார்க்கலா மல்லவா?"

திரு. எஸ். மகராஜன் 'தெய்வ மாக்கவி' நூலுக்குமட்டுமல்லாது பிற நூல்களுக்கும் ஜீவன் முக்தி கிடைக்க ஆசைப்படுகிறார். அவரது தவம் எப்பொழுது பலிக்கப் போகிறதோ?

அதிகாரத்தை வழிபடுவது — அதிகாரம் உடையவர்களைப் புகழ்ந்துரைப்பது தமிழ்க் கவிஞர்களின் வழிவழி வந்த செயல். கொடுத்தால் உன்னைப்போல் உண்டா என்பார்கள், இல்லா விட்டால் உன்னைப் போல் அற்பன் உண்டா என்று சொல்கிற ஒரு பழங் கவிதைகூட உண்டு. ஆனால் நமது சம காலத்தவர்கள் ஒரு சுடு சொல்லும் வீசாமல் காரியம் நிறைவேறும் வரையிலும் புகழுரையை அனைவரும் நாண அள்ளி வீசுகிறார்கள்.

—நா. கிருஷ்ணமூர்த்தி

With the best compliments

M/s Balaji Agencies

Caltex Dealers

&

M/s Balaji Tourists

Tourist Car Operators

85 MOUNT ROAD
MADRAS 600 018

Phone
443628
445083

இந்திய மொழி பல
இலக்கியம் ஒன்றே

எந்த மொழி வாசகருக்கும் எல்லா மொழி இலக்கியங்களும் எட்ட சாகித்திய அக்காதெமி உதவுகிறது. அதன் தமிழ் வெளியீடுகள் சில 1975 மார்ச்சு 31 வரை சலுகை விலைக்கு வழங்கப் பெறுகின்றன.

நாற்பது ரூபாய் மதிப்புள்ள
புத்தகத் தொகுதிகளை
முப்பதே ரூபாய்க்கு பெறலாம்!

- நூலகங்களுக்கும்
- கல்வி நிலையங்களுக்கும்
- இலக்கிய அன்பர் இல்லங்களுக்கும்
- பரிசு வழங்கவும்

ஏற்ற நூல்கள் இவை

நாவல், சிறுகதை, நாடகம், இலக்கிய வரலாறு, இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை, பிறநாட்டு இலக்கியம் எனப் பலவகை நூல்கள்.

உங்கள் ஊர் புத்தக விற்பனையாளரிடம் விவரம் பெறுங்கள் அல்லது அக்காதெமியை அணுகுக.



சாகித்திய அக்காதெமி
(தென் மண்டலம்)
21 ஹாடோஸ் சாலை
சென்னை 600 006

Published by N. Mahaaganapathy, I.20, Turnbull Road, Nandanam, Madras-600 035. Printed by M. K. Swamy at Prem Press, 8, M. K. Amman Koil Street, Madras 600 004. Editor: N. Krishnamurthy.